Paper ID: IDU05

# பதுருத்தீனின் தீன்குறளும் வள்ளுவரின் திருக்குறளும் - ஓர் ஒப்பீட்டாய்வு


**[1]ந.சுபராஜ், [2] & ந.சத்தியப்பிரியா**

[1]விரிவுரையாளர்,மொழித் துறை,தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
[2]ஆய்வு மாணவி,முதுகலைமாணி, மொழித்துறை,தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
subaraj84@yahoo.com ,sathiyapriya.n123@gmail.com



**ஆய்வுச் சுருக்கம்**

படைப்பாளிகளால் உருவாக்கப்படும் படைப்புக்களில் ஒரு சில மட்டுமே இன, மத வேறுபாடுகள் கடந்து நின்று பயன் தரக்கூடியன. இத்தகைய சிறப்பினைப் பெறுவது வள்ளுவப் பெருந்தகையினால் படைக்கப்பட்ட 'உலகப் பொதுமறை'யாகிய திருக்குறள். அறநூலாக அறியப்படும் இந்நூல் மனிதனின் எப்பருவத்தினருக்கும் பயன் தரக்கூடிய செய்திகளை கொண்டது. திருக்குறளை மேற்கோள் காட்டாத பிற்காலப் படைப்புக்களே இல்லையெனும் அளவிற்கு திருக்குறளின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. சோழர் காலத்தில் உமாபதி சிவாச்சாரியார் திருக்குறளை பின்பற்றியே தனது திருவருட்பயனை படைத்தார். நான்கு பால் வகைகளில் திருக்குறள் கூறாது விட்ட வீட்டுப்பாலை திருவருட்பயன் கூறியது. இவ்வாறு திருக்குறளின் தாக்கம் பிற்கால இலக்கியங்களில் பெரிதும் காணப்பட்டது. இவ்வரிசையில் பதுருத்தீனால் எழுதப்பட்ட தீன்குறளும் திருக்குறளை தழுவி எழுதப்பட்ட இலக்கியமாகும். 'தீன்' என்பது இஸ்லாமிய மார்க்கத்தைக் குறிப்பது. திருக்குறள் போன்றே இரு அடிகளில் வெண்பா யாப்பை பயன்படுத்தி படைக்கப்பட்டிருக்கும் தீன்குறள் எத்தகைய அடிப்படைகளில் திருக்குறளை தழுவி நிற்கின்றது என்பதையும் இஸ்லாமிய மார்க்க அம்சங்களையும் பிற கருத்துக்களையும் இவ்விலக்கிய அமைப்பைப் பயன்படுத்தி எங்கனம் இந்நூல் வெளிப்படுத்தியுள்ளது என்பதையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கங்களாகும். அறக்கருத்துக்களை வெளிப்படுத்த உகந்த யாப்பாகிய வெண்பாவை இஸ்லாமிய மார்க்கக் கருத்துக்களையும் இணைத்துப்பாட எவ்வகையான உத்திகளை பயன்படுத்தியிருக்க முடியும் என்பது ஆய்வின் பிரச்சினையாக உள்ளது. இவ்வாய்விற்காக பதுருத்தீனின் தீன்குறளும் வள்ளுவரின் திருக்குறளும் முதன்மைத் தரவுகளாக பயன்படுகின்றன. திருக்குறள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள பிற நூல்களும் கட்டுரைகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பயன்படுகின்றன. ஒப்பீட்டு ஆய்வு முறையியலில் அமையும் இவ்வாய்வு பகுப்பாய்வையும் சில இடங்களில் பயன்படுத்துகின்றது. இவற்றின் மூலம் தீன்குறள், அறத்துடன் இணைத்து மார்க்கம் பற்றியும் உரைப்பதற்கு திருக்குறளின் நலன்களில் கணிசமானவற்றை பயன்படுத்தியுள்ளது எனத் துணியலாம்.



**திறவுச்சொற்கள்:** தீன்குறள், திருக்குறள், அறக்கருத்து, இஸ்லாமிய மார்க்கம்


## அறிமுகம்

திருவள்ளுவரினால் இயற்றப்பட்ட திருக்குறள் கற்கும் அனைவருக்கும் பயன் தரக்கூடிய இலக்கியமாகும். 'உலகப் பொதுமறை'யாக அறியப்படும் இந்நூல் மனிதனின் எப்பருவத்தினருக்கும் பயன் தரக்கூடிய செய்திகளை கொண்டது. திருக்குறளை மேற்கோள் காட்டாத பிற்காலப் படைப்புக்களே இல்லையென்றே கூறமுடியும். தத்துவ இலக்கியங்கள் கூட திருக்குறளை பயன்படுத்தியிருக்கின்றன. குறளின் தாக்கம் பிற்கால இலக்கியங்களில் பெரிதும் காணப்பட்டது.

இவ்வரிசையில் பதுருத்தீனால் எழுதப்பட்ட தீன்குறளும் திருக்குறளை தழுவி எழுதப்பட்ட இலக்கியமாகும். 'தீன்' என்பது இஸ்லாமிய மார்க்கத்தைக் குறிப்பது. திருக்குறள் போன்றே இரு அடிகளில் வெண்பா யாப்பை பயன்படுத்தி படைக்கப்பட்டிருக்கும் தீன்குறள் எத்தகைய அடிப்படைகளில் திருக்குறளை தழுவி நிற்கின்றது என்பதையும் இஸ்லாமிய மார்க்க அம்சங்களையும் பிற கருத்துக்களையும் இவ்விலக்கிய அமைப்பைப் பயன்படுத்தி எங்கனம் இந்நூல் வெளிப்படுத்தியுள்ளது என்பதையும் இவ்வாய்வு ஆராய்கின்றது.

**திருக்குறள்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவம் பெற்ற நூலாக திருக்குறள் விளங்குகின்றது. இந்நூல் உலக மக்கள் அனைவரினதும் வரவேற்பை பெற்றதோடு, அனைத்து இன, மத மக்களையும் நல்வழிப்படுத்தி, செம்மை படுத்தும் பொதுமறையாக திகழ்கின்றது. சங்கமருவியகாலத்தில் அறத்தை வலியுறுத்துவதற்காக திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இந்நூலானது, வெண்பா யாப்பின் இருகுறள் வெண்பாவை கொண்டு பாடப்பட்டதாகும். அறம்சார் கருத்துக்களை இலகுவாகவும், விரைவாகவும், சுருக்கமாகவும் இப்பாவினாலேயே உரைக்கலாம். அதன்படி வள்ளுவர் மனிதனையும், சமூகத்தையும் செம்மைபடுத்தி அறப்போதனைகளை புகட்ட இந்த யாப்பை கையாண்டுள்ளார். இந்த இருகுறள் வெண்பாவை அவ்வளவு எளிதாக அனைவராலும் பயன்படுத்த முடியாது. ஆனால் வள்ளுவர் இதில் வெற்றி கண்டுள்ளார். திருக்குறள் எளிமையான அமைப்பைக் கொண்டுள்ள அதேவேளை, தன்னுள் சிந்தனைகளையும் வாழ்வியல் நெறிகளையும் கொண்டுள்ளது. இதனால்தான் மாங்குடி மருதனார்,

> ''ஓதற்கு எளிதாய் உணர்தற்கு அரிதாகி
>
> வேதபி பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்
>
> உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருக்குமே
>
> வள்ளலுவர் வாய்மொழி மாண்பு'' **(மாங்குடி மருதனார் தனிப்பாடல் திரட்டு:6)**

எனப் புகழ்ந்துள்ளார். வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர். திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை. (வரதர்,2001:3) எனவே குறித்தவொரு இனத்தையோ, மதத்தையோ முதன்மை படுத்தாது, அறத்தை மட்டும் வலியுறுத்தி மனித மேம்பாட்டை விரும்பும் நூலாக திருக்குறள் காணப்படுகின்றது.

இத்தகைய சிறப்பு கொண்ட இந்நூல் தனது கருத்தோட்டத்தை வெளிப்படுத்த அறத்துப்பால் (38), பொருட்பால் (70), காமத்துப்பால் (25) எனும் முப்பால் பிரிப்பில், மொத்தமாக 133 அதிகாரங்களைக் கொண்டது. இவ்வொவ்வொரு அதிகாரமும் பத்து குறட்பாக்களைக் கொண்டுள்ளது. அறத்துப்பால் அறத்தை வலியுறுத்த இல்லறவியல், துறவறவியல் என இருபகுப்பைக் கொண்டுள்ளது. பொருட்பால் அரசியல், அமைச்சியல், அரணியல், படையியல், நட்பியல், குடியியல் என ஆறு இயல்களைக் கொண்டுள்ளது. காமத்துப்பால் களவியல், கற்பியல் என இருபகுப்பைக் கொண்டுள்ளது. திருவள்ளுவர் தனது கருத்தை செம்மையாக வெளிப்படுத்த பல நுட்பமுறைகளைக் கையாண்டுள்ளார். அதிகார வைப்பு முறை அவற்றுள் பிரதானமானது. அதன் இயல்களும் தொடர் ஒழுங்கு முறையில் ஒன்றன்பின் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளன.

**தீன்குறள்**

'தீன் குறள்', கவிஞர் இ.பதுருத்தீனால் எழுதப்பட்டது. இருகுறள் வெண்பா யாப்பில் ஈரடி, இருசீர்களைக் கொண்டு இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இந்நூல் இஸ்லாமிய மார்க்கம் மற்றும் அறவியல் சிந்தனைகளை வலியுறுத்துவதை நோக்காகக் கொண்டதாகும். நூலாசிரியரான பதுருத்தீன் இந்தியாவின் இராமநாதபுரத்தை பூர்வீகமாகக் கொண்டவர். 1949ஆம் ஆண்டு மு.பா.இபுறாம்ஷா, சுலைமாபீவி ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இவரது பச்சை ரோஜா, இறைவா, இளைஞனே மற்றும் தீன்குறள் ஆகியன நூலுரு பெற்றுள்ளன. **(பதுருத்தீன்,இ,2001:7)** இவரது கவித் தத்துவப் புலமைக்கு சான்றாக 'தத்துவக் கவிஞர்' என இவர் விளிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. திருக்குறள் போன்று ஈரடி வெண்பாவில் பாடப்பட்ட இலக்கியங்கள் பல பிற்காலத்தில் தோற்றம் பெற்றாலும் திருக்குறளைப் பின்பற்றி எழுதப்பட்ட இலக்கியங்கள் ஒரு சிலவே காணப்படுகின்றன. அவற்றில் தீன்குறள் குறிப்பிட்டுக் கூறக்கூடியதொரு இலக்கியமாகும். 'தெவிட்டாத தேனாக, தீன்குறளை யாத்தீர்'**(பதுருத்தீன்,இ,2001:4)** என இதன் சிறப்பை மொழிகின்றார் கலாநிதி.எம்.அப்துல் வஹ்ஹாப்.

'தீன்' என்பதன் பொருள் இஸ்லாமிய மார்க்கம் அல்லது இஸ்லாமிய வழிமுறை என்பதாகும். இதன்படி இந்நூல் இஸ்லாமிய வழிமுறைகளை அனைவருக்கும் வலியுறுத்துவதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் காப்பு, அவையடக்கம், நோக்கம் ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளதோடு, புதையல், விடியல் படையல் என மூன்று பகுதிகளையும் கொண்டுள்ளது. இவ்வொவ்வொரு பகுதியும் முறையே 25 அதிகாரங்கள், 24 அதிகாரங்களை, 52 அதிகாரங்களை கொண்டதோடு இவ்வொவ்வொரு அதிகாரமும் முறையே பத்து, பத்து குறள்களையும் கொண்டு மொத்தமாக 1010 குறள்களை உள்ளடக்கியுள்ளது. 'புதையல்' இறைவனை அதாவது 'அல்லாஹ்'ஐ முதன்மைப்படுத்தியுள்ளது. 'விடியல்' என்ற பகுதி இஸ்லாமிய வாழ்வியல் நெறிமுறையை தொகுத்து தருகின்றது. 'படையல்' பொதுவாக இஸ்லாமிய மார்க்கத்தை ஒழுகுபவன் கைகொள்ள வேண்டிய நிலையை மற்றும் அறத்தை புகட்டுகின்றது. இந்தவகையில் முதலிரு பகுதிகளும் இஸ்லாமியச் சிந்தனைகளை கொண்டிருக்க இறுதிப் பகுதி மாத்திரம் பொதுவான அறவியல் சிந்தனைகளைத் தருகின்றது. இதனால்தான் பதுருத்தீன் அவர்களே இது முழுமையான இஸ்லாம் மார்க்கத்தை வலியுறுத்தும் நூலெனக் கூறிவிட முடியாது என்கிறார்.

> "தீன்குறளின் கருத்துக்கள் குர் – ஆன் - ஹதீஸின் மறு ஒலிபரப்பல்ல. பெரும்பாலானவை அவற்றின் எதிரொலி என்றே கூறலாம்" **(பதுருத்தீன்,இ,2001:3)**

என அழுத்தியுரைக்கின்றார் பதுருத்தீன் அவர்கள்.

**திருக்குறள் - தீன்குறள் ஒப்பீடு**

தீன்குறள் இஸ்லாம் மார்க்கத்தின் கருத்துக்களை எளிய முறையில் உரைக்க எழுந்த நூலாக அடையாளங் காணப்பட்டாலும் திருக்குறளின் தாக்கத்தினை அதில் தெளிவுபட கண்டு கொள்ள முடிகின்றது. தான் திருக்குறளை அடியொற்றியே எழுதியிருக்கின்றேன் என்பதனை தீன்குறள் ஆசிரியர்

இந்நூலின் பல இடங்களில் குறித்துச் செல்கின்றார். குறள் வெண்பாப் பாணியை தொடும் ஒவ்வொருவரும் எளிதாகவும் விரைவாகவம் கருத்து மதிப்பெண்களை காண வேண்டுமானால், வள்ளுவர்தம் தாக்கமில்லாமல் இயலாது என தெளிவாகக் குறிப்பிடுகின்றார் பதுருத்தீன் அவர்கள்.

> ''சுருக்கமான வரிகளால் தெறிப்பான சிந்தனைகளை வெளிப்படுத்த – ஜப்பானிய ஹைக்கூவின் தயவை நாடிக்கிடக்கின்ற தமிழ் மண்ணில் - தமிழின் தொன்மையான இலக்கண வரம்பையும் மரபையும் கொண்ட 'ஹைக்கூ'விற்கு முன்னோடியான குறள் வெண்பாவை நாம் ஏன் கைக்கொள்ளக் கூடாது என்ற துணிவில் இந்நூல் எண்ணிச் செய்தது'' **(பதுருத்தீன்,இ,2001:5)**

என தீன்குறள் ஆசிரியரவர்கள் திருக்குறளை பின்பற்றி தான் எழுத முற்பட்டதற்கான காரணத்தை வெளிப்படுத்துகின்றார்.

பெரும்புலவர் க.பழநி பாலசுந்தரனார் இது பற்றிக் குறிப்பிடும் போது,

> ''கவிஞர், திருக்குறளை நன்கு படித்துத் திருவள்ளுவர் வெவ்வேறு வகையில் குறள் வெண்பாக்களை தளை பிறழாமல் யாத்துள்ளாரோ அவ்வகையில் தம் தீன்நெறி போற்றி யாத்துள்ளார்'' **(பதுருத்தீன்,இ,2001:12)**

என்கிறார். அந்தவகையில் இவ்விரு நூல்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகளை கண்டு கொள்ள முடியும். இக்கருத்துக்கள் இவ்வாறு அமைகின்ற போதிலும் இவ்விரு நூல்களையும் ஆழமாக உற்று நோக்குகையில் அடிப்படையில் திருக்குறள் ஒரு அறநூல். ஆனால் தீன்குறள் பக்திநூல் அல்லது சமய நூல் எனும் வகைக்குள் உள்ளடக்கப்பட வேண்டியது. இவை வெவ்வேறு இலக்கிய வடிவங்கள். தான் திருக்குறளை பின்பற்றி எழுதியிருக்கின்றேன் என பதுருத்தீன் ஒத்துக் கொண்டாலும்,

> ''வள்ளுவத்துக்குள் இஸ்லாமியக் கருத்துக்கள் ஓரளவு இருக்கின்றன. தீன்குறளில் வள்ளுவத்தின் பெரும்பான்மைக் கருத்துக்களில்லை'' **(பதுருத்தீன்,இ,2001:5)**

என வள்ளுவரின் கருத்துக்களை தான் கூறவில்லை என மொழிகின்றார். பதுருத்தீன் அவர்களின் இக்கருத்தினை உண்மையற்றதாக நிறுவ அவரது சிந்தனைகள் இடங் கொடுக்கவில்லை. திருக்குறளின் அதிகாரங்களின் பெயர்களை அவர் உள்வாங்கியிருப்பினும் பதுருத்தீனின் கருத்துக்கள் யாவும் தூய்மையானதே. திருக்குறளின் கருத்துக்களும் அமைப்பு முறையும் தீன்குறளுக்கு பெரும் வழிகாட்டியாகவே இருந்துள்ளது. மாறாக பதுருத்தீன் கூறுவது போலவே தீன்குறளில் வள்ளுவத்தின் பெரும்பான்மைக் கருத்துக்களில்லை.

நூல்களின் அமைப்பு முறை, நூல்களின் உள்ளடக்கம், நூல்களின் நோக்கம், நடை, அணி கையாளும் முறைகள் என பல அம்சங்களில் ஒரே பாதையில் இவ்விரு நூல்களும் பயணிக்கின்றன. ஒரே பெயரில் அமைந்த அதிகாரங்கள் பல இவ்விரு நூல்களிலும் காணப்படுகின்றன. அதேவேளை தீன்குறள் வலியுறுத்தும் தனித்துவமான அம்சங்களும் உள்ளன. அந்த தனித்துவமான அம்சங்களே

தீன்குறள் ஆசிரியரின் புதுமைப் படைப்பாக இந்நூலில் காணலாம். இஸ்லாத்தின் அடிப்படைச் சிந்தனைகளை தெளிவாக பயன்படுத்தியிருப்பது இவ்விலக்கியத்தின் தனித்துவமாகும். திருக்குறளை பின்பற்றி எழுதினாலும் திருக்குறளின் சில அதிகாரங்களை பதுருத்தீன் நேரடியாக மறுத்தும் உரைக்கின்றார். எடுத்துக்காட்டாக. திருவள்ளுவர் 'புலால் மறுத்தல்' எனும் அதிகாரத்தை முன்வைக்க தீன்குறள் ஆசிரியர் 'புலால் உண்ணல்' எனும் அதிகாரத்தை படைக்கின்றார். அதேவேளை பன்னிரண்டு அதிகாரங்களின் பெயரை தீன்குறள் ஆசிரியர் திருக்குறளிலிருந்து முழுமையாக எடுத்துக் கையாண்டுள்ளார். இவ்வாறான தொடர்புகள் பற்றி தொடர்ந்து வரும் பகுதிகளில் விரிவாக ஆராயலாம்.

**அதிகார வைப்புமுறையில் உள்ள தொடர்பு**

அதிகாரங்களை ஒன்றன் பின் ஒன்றாக பொருத்தமான முறையில் முன்வைப்பதில் திருவள்ளுவர் தன்னிகரற்றவர். அவரது அதிகார வைப்புமுறையே தனித்து ஆராயப்பட வேண்டியது. விரிவஞ்சி சிலவற்றை எடுத்துக்காட்டலாம். வாழ்க்கைத் துணைநலம் எனும் அதிகாரத்தின் பின் வள்ளுவர் புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரத்தை முன்வைக்கின்றார். வாழ்க்கைத் துணைநலமாவது வாழ்க்கைக்குத் துணையாகிய மனையாளது பெண்மை இலக்கணம் கூறுதலாகும். இதற்கு முன் இல்வாழ்க்கை எனும் அதிகாரம் கூறப்படுகின்றது. இங்கு இவ்வில்வாழ்க்கைக்குத் துணை ஆகிய இல்லாளது நன்மை கூறப்பட்டு பின்னர் 'புதல்வரைப் பெறுதல்' எனும் அதிகாரத்தில் புதல்வரைப் பெற்றதனாலாய பயன் கூறப்படுகின்றது. இவ்வாறு தொடர்ச்சியான அதிகார வைப்புமுறையை (இல்வாழ்க்கை – வாழ்க்கை துணைநலம் - புதல்வரைப் பெறுதல்) வள்ளுவர் கையாளுகின்றார்.

இதனை நன்கு அவதானித்து பதுருத்தீன் தன் அதிகார முன்வைப்புக்களை நகர்த்திச் செல்கின்றார். எடுத்துக் காட்டாக மனிதனின் இல்வாழ்க்கைக்கு தற்காலச் சூழலில் பெருந்தடையாக இருப்பனவற்றுள் வரதட்சணையும் ஒன்றாகும். இதனால் இல்லறத்தின் சிறப்புக்களை உரைக்கும் 'இல்வாழ்க்கை' எனும் அதிகாரத்தின் பின்னர் 'வரதட்சணை' எனும் அதிகாரத்தினை முன்வைத்தார்.

''அருள்செய்தல் ஆக்கமும் செய்தல்மற் றில்லை

பொருள் செய்யும் இல்லறத்தைப் போல்'' **(தீன்குறள், இல்வாழ்க்கை:10)**

என இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில், இல்லறத்தைப் போல அருளும் பொருளும் ஆக்கமும் ஊக்கமும் செய்யக்கூடியது வேறில்லை என இல்வாழ்க்கையை புகழ்கின்றார். தொடர்ந்து வரன்தட்சணை எனும் அதிகாரத்தை முன்வைத்து, வாழ்க்கைப்பட வரும் பெண்ணே பெருங்கொடைச் செல்வமாக வாய்க்கும் பொழுது மணப்பதற்கு அவளிடம் பொன், பொருள் கேட்பதேன்? என்கிறார். இதனை,

''பெண்ணே பெருங்கொடை பின்னும் மணப்பதற்குப்

பொன்னேன் பொருளேன் புகல்''**(தீன்குறள், வரன்தட்சணை:1)**

என்கிறார். வள்ளுவர் இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தின் பின்னர் வாழ்க்கை துணைநலம் பற்றிப் பேசினார். ஏனெனில் இல்வாழ்க்கைக்கு வாழ்க்கைத் துணைவியின் ஒத்துழைப்பு மிக அவசியம் எனக் கருதியதால். ஆனால் தீன்குறள் 'இல்வாழ்க்கை' அதிகாரத்தின் பின்னர் 'வரன்தட்சணை' எனும் அதிகாரத்தை வைத்துள்ளது. இதற்கு காரணம் இன்றைய சூழ்நிலையே. இல்வாழ்க்கையில் துணைவி

நிலைத்திருக்க வரன்தட்சணை ஒரு தடையாக இன்று இருப்பதனால் இவ்வதிகார வைப்புமுறையை பதுருத்தீன் கையாண்டிருக்கக் கூடும். எனவே காலத்தின் தேவை கருதி அதிகார வைப்புமுறையை நகர்த்தியிருப்பது பதுருத்தீனின் தனித்துவத்தினைக் காட்டுகின்றது.

இவ்வாறு ஒவ்வொரு வைப்புமுறையையும் விளக்கிச் செல்லலாம். வள்ளுவர் திருக்குறளை முப்பாலாக படைத்தது போலவே பதுருத்தீனும் மூன்று பகுதிகளாக திருக்குறளை உருவாக்கினார். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய அதிகாரங்களை கொண்டமைய தீன்குறள், புதையல், படையல், விடியல் ஆகிய அதிகாரங்களைக் கொண்டது. திருக்குறள் ஒரு அற நூலாதலால் மனிதன், வாழ்வில் அறத்தின் வழியே வாழ வேண்டுமென 'அறத்துப் பாலில்' வலியுறுத்துகின்றது. அதன்படி தீன்குறள் ஒரு சமய நூலாதலால் 'புதையல்' எனும் முதற் பகுதியில் இறைவனைப் பற்றியுரைக்கின்றது. திருக்குறள் தனது இரண்டாவது பகுதியாகிய 'பொருட்பாலில்' அறத்தின் வழி பொருளீட்ட வேண்டுமெனவும் அறத்தினை எவ்வாறு அனுபவிக்க வேண்டுமெனவும் உரைக்கின்றது. இதன்படி தீன்குறளும் இறையின்பத்தை எவ்வாறு அனுபவிக்க வேண்டுமென 'படையல்' எனும் இரண்டாவது பகுதியில் கூறுகின்றது. திருக்குறள் தனது மூன்றாவது பகுதியாகிய இன்பத்துப் பாலில் இல்லறவியல் பற்றியும் அதில் ஏற்படும் இன்பம் பற்றியும் உரையாடுகின்றது. அதன்படி தீன்குறளும் 'விடியல்' எனும் பகுதியில் இறையின்பத்தைப் பெற உலக வாழ்வு எவ்வாறு முறையான இன்பமாக இருக்க வேண்டுமென வெளிப்படுத்துகின்றது. இவ்விரு இலக்கியத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துப் பத்து குறட்பாக்களே காணப்படுகின்றன. அதேவேளை, தீன் குறள் ஆசிரியர் இந்நூலின் பகுப்பினை அதிகாரங்கள் என்றோ, முப்பால் பகுப்பு என்றோ குறிப்பிட்டுக்கூறவில்லை. திருக்குறள் மொத்தமாக 1330 குறள்களைக் கொண்டிருக்க, தீன்குறள் 1010 குறள்களைக் கொண்டு விளங்குகின்றது.

**ஒரே பெயரில் அமைந்த அதிகாரங்கள்**

திருக்குறள், தீன் குறள் ஆகிய இரு நூல்களும் வெவ்வேறு நோக்கங்களை கொண்டு புனையப்பட்டவையெனினும் பல அதிகாரங்கள் ஒரே பெயரைக் கொண்டு அமைந்துள்ளன.

1. அறிவுடைமை
2. இல்வாழ்க்கை
3. அன்புடைமை
4. பொறை உடைமை
5. வாய்மை
6. கல்வி
7. கள் உண்ணாமை
8. அரசியல்
9. ஊழ்
10. இறைமாட்சி
11. ஒழுக்கமுடைமை

இவற்றுள் சில அதிகாரங்களைப் பற்றி இங்கு ஆராயலாம். அறிவுடைமை எனும் அதிகாரத்தில் இரு நூல்களும் அறிவின் முக்கியத்துவம், அறிவின் தன்மை, அறிவிலிகளின் செயல் என்ற வகையில் கருத்துக்களை முன்வைத்துள்ளன. எனினும் திருக்குறள் விடயங்களை நன்கு ஆராய்ந்து மெய்ப்பட உணர்வதே அறிவுடைமை என்கிறது. இதனை,

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு” **(திருக்குறள், அறிவுடைமை:3)**

என்கிறது திருக்குறள். ஆனால் தீன்குறள் இறையை உணரும் அறிவே உண்மையானது என்கிறது. இதனை கீழ்வரும் குறளில் காணலாம்.

“பொறியும் புலனும் புடம்போட் டிறையை

அறியும் அறிவே அறிவு” **(தீன்குறள், அறிவுடைமை:10)**

அதாவது ஐம்பொறியையும், ஐம்புலனையும் ஆராய்ந்த அறிவையும் அடக்கி, அலசி அதன்பின் இறையை உணர்ந்து அறியும் அறிவே உண்மையான அறிவாகும். எனவே அறிவு பற்றிய எண்ணோட்டத்தில் இவ்விரு புலவர்களும் வேறுபடுகின்றனர்.

‘இல்வாழ்க்கை’ எனும் அதிகாரத்தில் திருக்குறள் அறத்தோடு நிற்கும் இல்வாழ்க்கை, கதியற்றோருக்கு இல்வாழ்வை மேற்கொள்பவனின் துணை, தவத்தை விட இல்வாழ்கை சிறப்பானது, சிறப்பான இல்வாழ்கையை மேற்கொள்பவன் தெய்வத்துள் வைத்து நோக்கப்படுவான் போன்ற கருத்துக்களைக் கூறுகின்றது.

“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவருக்கும்

நல்லாற்றின் நின்ற துணை” **(திருக்குறள், இல்லறவியல்:1)**

தீன்குறளும் இல்லறத்தை நல்லறமாக வலியுறுத்துகின்றது. ஆண்-பெண் இணைந்து வாழும் இல்வாழ்கையை மேலானதாக புகட்டுகின்றது.

“காப்பும் கனிவும் இணைந்தாயின் இல்வாழ்க்கை

யாப்புக் கவிதை அது” **(தீன்குறள், இல்வாழ்க்கை:6)**

இதுபோல் குறளின் வடிவத்தில் உள்ள ஒற்றுமைகளை இரு நூல்களிலும் காணமுடிகின்றது. எடுத்துக் காட்டாக,

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது” **(திருக்குறள், இல்வாழ்க்கை:5)**

என்கிறது திருக்குறள். இச்சாயலில் தீன்குறள்,

“காப்பும் கனிவும் இணைந்தாயின் இல்வாழ்க்கை

யாப்புக் கவிதை அது” **(தீன்குறள், இல்வாழ்க்கை:6)**

என்கிறது. இவ்வாறு திருக்குறளின் முன்வைப்பு முறைகளை தற்காலத்திற்கேற்ற வகையிலும் தனது மைய விடயத்திற்கு முரண்படா வண்ணமும் முன்னெடுத்துச் சென்றுள்ளார் பதுருத்தீன் அவர்கள்.

**எழுந்த நோக்கங்களில் உள்ள தொடர்பு**

திருக்குறளை வள்ளுவப் பெருந்தகை சமூகத்தினதும் தனிமனிதனதும் ஈடேற்றத்திற்காக அமைத்துள்ளார். மனிதன் தனது அனைத்து செயற்பாடுகளிலும் அறத்தை விரும்ப வேண்டும் என வற்புறுத்துகின்றார். இதனால் தான் வள்ளுவப் பெருந்தகை தனிமனித அறம், சமூக அறம், அரசியல் அறம் என பல பகுப்புக்களை வகுத்து அறத்தை வலியுறுத்தியுள்ளார்.

''அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்

போஒய்ப் பெறுவது எவன்'' **(திருக்குறள், இல்லறவியல்:6)**

''வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்

கோல்நோக்கி வாழும் குடி'' **(திருக்குறள், செங்கோண்மை:2)**

இவ்வாறாக வள்ளுவர் அறத்தை தனிமனிதன், குலம், சமயம் என்ற பாகுபாடின்றி நவிழ்ந்துள்ளார். திருக்குறள், ஒருவன் இனிதே நல்வாழ்க்கை வாழ்ந்து அறவழியில் ஈடேற உருவாக்கப்பட்டது. இதுவே திருக்குறள் எழுந்ததன் நோக்கமாக அமைகின்றது.

ஆனால் தீன்குறள் இஸ்லாத்தை கருப்பொருளாகக் கொண்ட நூலாகும். தொடக்கம் முதல் அந்தம் வரையில் இஸ்லாமிய கருத்துக்களை தன்னுள்ளே பொதித்துள்ளது. இஸ்லாமியர் ஒருவரின் நாளாந்த செயற்பாடுகளை வலியுறுத்துகின்றது. இஸ்லாமிய மார்க்கத்தை பின்பற்ற வழிசெய்கின்றது. இறைநம்பிக்கையை கொடுக்கின்றது. ஒவ்வொரு அதிகாரமும் அல்லாஹ்வை, அல்லாஹ்வின் தன்னிகரில்லா தன்மையை, இஸ்லாமியரின் கடமைகளை அவர்களது வாழ்வியல் வழிமுறைகளை அழகுற தருகின்றது. அருள்பாலிக்கும் இறை இல்லங்களில் மக்கள் வாழைச்சீப்பு வரிசைப்போல அணிவகுத்து தொழ முன்வர வேண்டும் என்கிறது தீன்குறள். இதனை,

''அருட்செய் இறையில்லம் ஆங்கே வரிசையுறல்

வாழைச்சீப் பன்னமுன் வந்து'' **(தீன்குறள், இறையில்லம்:1)**

எனும் குறளில் காணலாம். இதுபோன்று,

''மண்ணெலாம் தாய்மண் மதிப்பாகா தென்றாலும்

கண்ணெலாம் நோக்குமக் கா'' **(தீன்குறள், மக்கா நகர்:2)**

எனவும் உரைக்கின்றது. அதாவது, தாய்நாட்டின் சிறப்பை பிறநாடு பெறாதென்றாலும், மக்கா நகரை காணமாட்டோமா என்ற ஏக்கம் இருக்கும் என இக்குறள் மக்கா நகரின் சிறப்பை உரைக்கின்றது. இது முஸ்லிம்களின் முக்கிய கடமைகளில் ஒன்றான 'ஹஜ்' யாத்திரையை குறித்து நிற்கின்றது. இதுபோல்,

''வருந்தும் மடப்பிணியில் வையம் எளிய

மருந்தெனத் தீன் வரவு'' **(தீன்குறள், சன்மார்க்கம்:4)**

என்பதில் மடமைப் பிணியில் வையகம் வருந்திக் கொண்டிருந்த போது அதைத் தீர்க்கப் பெருஞ்செலவோ, மனக்கடினமோ இல்லாமல் எளிய மருத்துவமாக தீனின் வரவு அமைந்தது என்கிறது. இவற்றினூடாக இஸ்லாமிய வாழ்க்கையையும், அதன் நெறிமுறைகளையும் வலியுறுத்துவதை நோக்காகக் கொண்டே தீன்குறள் எழுந்தது.

**உள்ளடக்கத்திலுள்ள தொடர்பு**

திருக்குறள் அறத்தை வலியுறுத்தும் நூலாகும். அறமே இந்நூல் முழுவதும் விரவிக் காணப்படுகின்றது. திருக்குறள் தனிமனித அறம் தொடக்கம் முழுச் சமுதாய அறம் வரையில் தொகுத்துத் தருகின்றது. அறத்தை வலியுறுத்த அறன் வலியுறுத்தல் என்ற தனி அதிகாரத்தையும் தன்னுள் கொண்டுள்ளது. மனிதனின் அசைவிலும் அறத்தை காண விரும்பும் நூல் திருக்குறள். இதனால் தான் வள்ளுவப் பெருந்தகை,

“சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு

ஆக்கம் எவனோ உயிர்க்கு” **(திருக்குறள்,அறன் வலியுறுத்தல்:1)**

என அறத்தினை முதன்மைப் படுத்தி அந்த அறத்தினை சிறப்பிக்க பொருள், இன்பம் ஆகிய இரு புருடார்த்தங்களையும் முன்வைத்தார் திருவள்ளுவர். அறத்தின் வழியிலேயே பொருள் ஈட்ட வேண்டும் அதன் வழியிலேயே இன்பம் அனுபவிக்க வேண்டுமென முப்பாலை முன்வைத்தார். இதுவே திருக்குறளின் உள்ளடக்கமாக அமைகின்றது.

ஆனால் தீன்குறள் இஸ்லாமிய மார்க்கத்தை மையப்பொருளாகக் கொண்ட நூலாகும். அதன்படி தீன் குறள் இஸ்லாமியர்கள், அம்மதத்தை அதன்வழியில் பின்பற்றி நன்மார்க்கத்தை அடைய வழிவகுப்பதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலானது திருக்குறள் போன்று முழு சமுதாயத்தையும் உள்ளடக்காது, சமூகத்தின் ஒரு பகுதியான மதத்தையும், அதன் நெறிமுறைகளையும் புகட்டுவதாக அமைந்துள்ளது. உதாரணமாக ஈமான் (இறைநம்பிக்கை), தொழுகை, நோன்பு, சுன்னத் (நபி நடைமுறை) பள்ளிவாசல் போன்ற அதிகாரங்களை கூறலாம்.

“தொழுதார்தம் துய்த்தல், பசித்தகணம் வாய்க்கும்

நழுவா உணவின் நலம்” **(தீன்குறள், தொழுகை:5)**

அதாவது தொழுது வருவார்தம் நன்மை, பசியெழுந்த நேரத்தில் தவறாமல் புசிக்கக் கிடைத்த உணவு போன்றது. இதனூடாக இஸ்லாமியர்களின் தொழுகையின் மூலம் கிடைக்கும் பயன்களும் முக்கியத்துவமும் உணர்த்தப்பட்டுள்ளன.

பக்தியை அல்லது சமயத்தை தீன்குறள் முன்னிறுத்தினாலும் வள்ளுவரின் மையப்பொருளாகவிருந்த அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று அம்சங்களையும் அது தவிர்த்து விடவில்லை. அறத்தினைப் பற்றி ஒழுக்கமுடைமை, நல்லிணக்கம், சினம், வாய்மை போன்ற அதிகாரங்களிலும் பொருளினை உழைப்பு, பணம், செலவு, கடன், ஈகை போன்ற அதிகாரங்களிலும் இன்பத்தினை இல்வாழ்க்கை, வரன்தட்சணை, தலாக், கைம்பெண் போன்ற அதிகாரங்களிலும் கையாண்டுள்ளார். இருப்பினும் வள்ளுவரின் மையவிடயங்களிலிருந்து தீன்குறள் வேறுபடுவது வீட்டின்பத்தைப் பற்றி பேசுவதிலாகும். வீட்டின்பம் பற்றி வள்ளுவர் தனியதிகாரத்தின் மூலம் எடுத்துக் காட்டவில்லை. ஆனால் தீன்குறள்

பேரின்பத்திற்கு தனியதிகாரம் அமைத்து, இறைவனிடத்தில் முழுமையாக தம்மை ஒப்படைத்து அடைகின்ற இன்பமே பேரின்பம் என்கிறது. இதனை,

''பேரின்ப மென்ப பிணிபசி விட்டிறைபால்

ஓரின்பந் துய்க்கும் உணர்வு'' **(தீன்குறள்,பேரின்பம்:1)**

எனக் குறிப்பிடுகின்றது. எனவே வள்ளுவரின் முப்பாலை தீன்குறள் பயன்படுத்தியிருக்கும் அதேவேளை வள்ளுவர் கூறாது விட்ட வீட்டுப்பாலை இணைத்துச் சென்றுள்ளது. எவ்வாறாயினும் இந்த நான்கு பாலாகிய புருடார்த்தங்களை மைய உள்ளடக்கமாக தீன்குறள் கொண்டிருக்கவில்லை. இஸ்லாமிய சிந்தனைகளை வெளிப்படுத்துவதையே அது மையமாகக் கொண்டிருக்கின்றது. அதில் அது வெற்றியும் கண்டிருக்கின்றது.

**வெண்பா யாப்பின் கையாளுகை**

அதிகார வைப்புக்களைப் போன்று வெண்பா யாப்பின் பயன்பாட்டிலும் தீன்குறள் திருக்குறளை செம்மையாக பின்பற்றியுள்ளது. திருக்குறள், தீன் குறள் இரண்டும் வெண்பா யாப்பின் இருகுறள் வெண்பா யாப்பில் அமைந்துள்ளன. ஈரடி, எழுசீர் கொண்டும் இவை அமைந்துள்ளன. வெண்பா, மரபுச் செய்யுள் வகைகளுள் ஒன்றாகும். தமிழில் மரபுப் பாக்கள், ஒலிப்பியல் அடிப்படையில் அடி, சீர், அசை முதலியவற்றைக் கொண்டு வகை பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பன பரவலாக ஆளப்பட்டுள்ள பழம் பெரும் பாவினங்கள். அவற்றுள் வெண்பா என்னும் வகையில் ஒவ்வொரு பாடலும் இரண்டு முதல் பன்னிரண்டு அடிகள் வரை கொண்டிருக்கும். குறள் வெண்பா என்பது வெண்பா வகையின் இரண்டு அடி உள்வகையாகும்.

''விசும்பின் துளிவீழின் அல்லாமற் றாங்கே

பசும்புல் தலைகாண்பு அரிது'' **(திருக்குறள், வான்சிறப்பு:6)**

''ஈயாக் கருமி இமயத் துயர்ந்தாலும்

தோயார் சுவனச் சுகம்'' **(தீன்குறள், சொர்க்கம்:4)**

என குறள் வெண்பாக்களை இவ்விரு இலக்கியங்களும் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். திருக்குறளின் வெண்பா யாப்பின் பயன்பாட்டை தீன்குறள் பின்பற்றியிருக்குமாற்றினை கவிக்கோ அப்துல் ரகுமான்,

> ''பாக்களில் வெண்பா, புலி. அதிலும் குறள் வெண்பா, பசித்த புலி. அந்தப் புலியை கூண்டுக்குள் நிறுத்தித் தம் ஆணைப்படி ஆட வைத்தவர் வள்ளுவர் அவருக்குப் பின் பலர் அந்தக் கூண்டுக்குள் சென்றிருக்கின்றனர். ஆனால் சிலரே மீண்டு வந்தனர். இப்போது கவிஞர் பதுருத்தீன் அந்தப் புலியை ஆட்டிவிட்டு மீண்டிருக்கின்றார். இந்தத் துணிச்சலுக்கே அவரைப் பாராட்டலாம்''**(பதுருத்தீன்,இ,2001:4)**

எனச் சுட்டிக் காட்டுகின்றார். எனவே வெண்பா யாப்பினை வள்ளுவரைப் பின்பற்றி திறன்பட பதுருத்தீன் தீன்குறளில் கையாண்டுள்ளமையே தீன்குறளின் சிறப்பிற்கு அடிநாதமாக அமைகின்றது.

**வேறுபடும் முக்கிய மூன்று இடங்கள்**

திருக்குறள் வலியுறுத்தும் துறவறம், புலால் உண்ணாமை ஆகியவற்றை தீன்குறள் வலியுறுத்தவில்லை. அதேவேளை திருக்குறள் நிராகரித்த பேரின்பத்தை தீன்குறள் உட்புகுத்தியுள்ளது. இவை இவ்விலக்கியங்கள் வேறுபடும் முக்கிய மூன்று இடங்கள் எனலாம். பேரின்பம் பற்றி முன்னைய பகுதியில் ஆராய்ந்ததால் முதல் இரண்டு வேற்றுமைகள் பற்றி ஆராய்வது பொருந்தும். புலால் மறுத்தல் எனும் அதிகாரத்தில் திருக்குறள் புலால் உண்ணலை வன்மையாக கண்டிக்கின்றது. இன்னொரு உயிரை உண்பவன் அருளுடையவன் ஆக முடியாது எனவும், மற்றொரு உயிரின் சதையை உண்பது பாவம் எனவும், ஆயிரம் யாகங்களை செய்வதை விட ஓர் உயிரை கொல்லாது இருப்பது மேல் எனவும் வலியுறுத்துகின்றது.

''உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்

புண்ணது உணர்வார்ப் பெறின்'' **(திருக்குறள், புலால் மறுத்தல்:7)**

அதாவது, புலால் உண்ணாமலிருக்க வேண்டும், ஆராய்ந்து அறிவாரைப் பெற்றால், அப் புலால் வேறோர் உயிரின் புண் என்பதை உணரலாம் என்கிறது திருக்குறள். ஆனால் தீன்குறள் புலால் உண்ணல் எனும் அதிகாரத்தைக் கொண்டு புலால் உண்ணலை வலியுறுத்தி நிற்கின்றது. தீன்குறள், பசிக்கு பொருத்தமான உயிர்களை உண்ணலாம் எனவும், பசிக்கு உணவில்லாத போது உணவிற்கு பொருத்தமான விலங்குகளைக் கொல்லலாம் எனவும் கூறுகின்கிறது. மேலும் தீன்குறள் பின்வரும் செயல்களை செய்வதை விட புலால் உண்ணல் மேல் என்கின்றது.

1. வண்டியில் பெருஞ்சுமை ஏற்றி மாடுகளை துன்புறுத்துவதே பாவம்.
2. எஸ்கிமோ நாட்டில் புல்லும் இல்லாத நிலையில் எவ்வாறு கொல்லாமை விரதம் பூணுவர்.
3. நெல், கீரை முதலியவற்றிற்கும் உயிருண்டு.
4. ஓர் உயிருள்ள நெல் நாற்றுகளை அறுப்பதும் பாவம்.
5. மாடுகளை வாட்டி வதைத்து பராமரிக்காது விடுவதே பாவம்.

என ஊன் உண்ணலுக்கான நியாயங்களை முன்வைக்கின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தீன்குறள் புலால் உண்ணலை ஆதரிக்கின்றது.

''கொல்லலே கூடா எனினும் குடல்பசிக்குக்

கொல்லலும் கூடும் எனல்'' **(தீன்குறள், புலால் உண்ணல்:1)**

அதாவது பொதுவாக, எவ்வுயிரும் கொல்லப்படுதல் கூடாது. ஆனால், பசிக்கு உணவாக ஆகுமென விலங்கை கொல்ல அனுமதி உள்ளது என்கிறது தீன்குறள். எனினும் கீழ்வரும் குறள் இந்நூல் புலால் உண்ணலை மறுக்கின்றது எனவும் எண்ணத்தோன்ற வைக்கின்றது.

''புலியாக வேண்டா புவியில் எவரும்

பலியாக வேண்டா பசிக்கு'' **(தீன்குறள், புலால் உண்ணல்:3)**

அதாவது தன் பசி தீர்க்கப் புலி மானைத் துரத்தி அடித்துச் சாப்பிடுவது போல கொடுமையும் வேண்டாம், பசியெடுத்துப் புசிக்க எதுவும் கிடைக்க வில்லையேயென்று ஓர் உயிர் உலகில் சாகவும் வேண்டாம். இதில் தீன் குறள் புலால் உண்ணலை விரும்புகின்றதா, இல்லையா என்பது கேள்விக்கிடமாக உள்ளது.

புலால் உண்ணல் போன்று இவ்விரு நூல்களும் வேறுபடும் மற்றுமோர் இடம் துறவு பூணல் எனும் கருத்தியலிலாகும். திருக்குறள் துறவறத்தை ஆதரிக்கின்றது. ஆனால் தீன்குறள் துறவறத்தை ஆதரிக்கவில்லை. இஸ்லாம் திருமணத்தையே விரும்பி வலியுறுத்துவது, திருமணத்தை கட்டாயமாகக் கொண்டது இஸ்லாம். அதனால் துறவையும், துறவிற்கு ஏதுவான தவத்தையும் தீன்குறள் கண்டிக்கின்றது. இதற்கு தனி அதிகாரத்தையும் கொண்டுள்ளது தீன்குறள்.

திருவள்ளுவர் துறவறத்தை ஆதரித்து தனது துறவு எனும் அதிகாரத்தில்,

''தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி

வலைப்பட்டார் மற்றை யவர்''[31] **(திருக்குறள், துறவு:8)**

என்கிறார். அதாவது, முற்றத் துறந்தவறே உயர்ந்த நிலையினர் ஆவர், அவ்வாறு துறக்காத மற்றவர் அறியாமையாகிய வலையில் அகப்பட்டவர் ஆவர் என துறவிகளை ஆதரித்து உரைக்கின்றது. ஆனால் தீன்குறள்,

''துறவை அறமெனச் சொல்லு முலகில்

துறவையறச் சொன்னது தீன்'' **(தீன்குறள், துறவாமை:1)**

என்கிறது. அதாவது, உலகைத் துறப்பது ஒரு அறமெனச் சொல்லும் உலகத்தில் துறவுக் கொள்கையை அறுத்தெறியச் சொன்ன ஒரே மார்க்கம் இஸ்லாமே என்கிறது. இவ்வாறு பேரின்பம், புலால் உண்ணல், துறவு பூணல் ஆகிய கருத்தியல்களில் இவ்விரு நூல்களும் நேரிடையாக முரண்பட்டு நிற்கின்றன.

**முடிவுரை**

தீன்குறள் இஸ்லாமிய மார்க்கத்தை வலியுறுத்துவதையே பிரதான நோக்கமாக கொண்டு எழுதப்பட்டது. அதேவேளை தீன்குறள் மனித வாழ்க்கைக்கு தேவையான விடயங்களையும் வலியுறுத்தியுள்ளது. மனிதாபிமானம், ஒற்றுமை, சோம்பல், பழிவாங்கல், மன்னித்தல், உழைப்பு, விட்டுக்கொடுத்தல், வாக்குறுதியளித்தல் போன்ற, ஒவ்வொருவரும் பெற்றிருக்க வேண்டிய சிந்தனைகளை வலியுறுத்தி உள்ளது. இவ்விடயங்கள் மனிதனை செம்மை படுத்துபவை. மேலும் தீன் குறள் ஜோதிடம், வரதட்சணை பெறல் என்பவற்றை விரும்பவில்லை. பெண்களின் மறுமணத்தை (விதவைகள் மறுமணம்) ஆதரிக்கின்றது. இதற்காக கைம்பெண் என்ற அதிகாரத்தையும் உருவாக்கியுள்ளது. இந்த ஒழுக்கவியல் கருத்துக்கள் திருக்குறளை பின்பற்றி எழுதப்பட்டவை.

கால அமைவில் இவ்விரு நூல்களுக்கும் பாரிய இடைவெளி காணப்படுகின்ற போதிலும், குறள் வெண்பாவில் கருத்தை முதன் முதலில் தொகுத்தளித்த நூல் திருக்குறளே. இதன் தாக்கம்

பிற்பட்டோரிடையே காணப்படுவது இயல்பே. திருக்குறளின் தாக்கத்தை தீன்குறளில் செம்மையாக காணக்கூடியதாக இருக்கின்றது. எனினும் கவிஞர் பதுருத்தீன் தனக்கான தனிபாதையை அமைத்துக்கொண்டுள்ளார். திருக்குறள் போன்ற அமைப்பில் அமைந்துள்ள தீன்குறள் பல விடயங்களில் திருக்குறளை ஒத்திருக்கின்றது. வள்ளுவரின் முப்பாலை தீன்குறள் பயன்படுத்தியிருக்கும் அதேவேளை வள்ளுவர் தவிர்த்த வீட்டுப்பாலை இணைத்துச் சென்றுள்ளது. எவ்வாறாயினும் இந்த நான்கு பாலாகிய புருடார்த்தங்களை மைய உள்ளடக்கமாக தீன்குறள் கொண்டிருக்கவில்லை. இஸ்லாமிய சிந்தனைகளை வெளிப்படுத்துவதையே அது மையமாகக் கொண்டிருக்கின்றது. அதில் அது வெற்றியும் கண்டிருக்கின்றது. தீன்குறள், திருக்குறள் வலியுறுத்தும் சில அம்சங்களை கண்டிக்கின்றது. இஸ்லாமிய மார்க்கம் மட்டும் என்றில்லாது ஒவ்வொரு தனிமனிதனின் ஈடேற்றத்தையும் திருக்குறள் போன்று விரும்பியுள்ளது. எவ்வாறாயினும் சமூகத்தை செம்மைபடுத்துவது என்ற வகையில் தீன்குறள் திருக்குறளை தழுவி நிற்கின்ற போதிலும் அதற்குள் இறையியலையும் இணைத்துச் சென்றதில் தனித்துவம் பெற்றுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


1. அப்துஸ்ஸமத், அ. ஸ., (1996), இஸ்லாமிய இலக்கிய நோக்கு, இஸ்லாமிய நூல்வெளியீட்டுப் பணியகம்
2. இரத்தினம் நவரத்தினம், (1958), குறளில் உணர்ச்சி வளம், சிவதொண்டன் நிலையம்
3. இராசையா, வ., (2005), குறள்வழி வாழ்வு, அரவிந்தம் வெளியீடு
4. இராமநாதன், பொன்னம்பலம், (1919), திருக்குறளின் பாயிரமும் இராமநாதீயமும், நாவலர் அச்சுக்கூடம்
5. இராஜநாயகம், சு., (1975), திருக்குறள்: பொருட்பால் - ஒழிபியல், சிறி சண்முகநாதன் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்
6. உவைஸ், எம். எம்., (1961), இஸ்லாமியத் தென்றல், மணிக்குரல் பதிப்பகம்
7. சமீம்,ஏ.எம்., (1997), இஸ்லாமிய கலாச்சாரம், குமரன் புத்தக இல்லம்
8. செய்யித் ஹஸன் மௌலானா, எஸ். ஏ. ஆர். எம்., (2005), இஸ்லாமும் தமிழும் இலக்கிய சங்கமம், இஸ்லாமிய இலக்கியக் கழகம்
9. சொக்கலிங்கம், க.இ (1993)இ திருக்குறள்: அறத்துப்பால் இல்லறவியல், சிறி சுப்பிரமணிய புத்தகசாலை
10. பதுருத்தீன்,இ., (2001), தீன் குறள், தளபதி தாரீக் பதிப்பகம், சென்னை
11. பெரியதம்பி, மு.வு., (2009), திருக்குறளில் இருந்து திருமந்திரம் வரை, சிவசக்தி வெளியீட்டகம்
12. வரதர், (2001), திருக்குறள், வரதர் வெளியீடு